ஏற்கெனவே கட்டப்பட்ட பல கட்டடங்கள் பழுதடைந்துள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றுக்கான கட்டடங்களை கட்டித் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தக் கட்டடங்களைப் பழுதுபார்ப்பதற்கான அனுமதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் ஒன்றியத்தில் பல்வேறு கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரினார்கள். அதற்கு நிச்சயமாக நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அல்லது பிற திட்டங்களின்மூலம் அங்கு கட்டடங்கள் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், வழிகாட்டி நெறிமுறைப்படி பழுதடைந்த கட்டடங்களை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பழுதுபார்க்க முடியாது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்து, கட்டடத்தைப் பழுதுபார்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

சாலை அமைத்தல்

***3703—திரு. வே. சம்பத்குமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 ஏப்ரல் 7]

அரூர் தொகுதி, சித்தேரி ஊராட்சி, வாச்சாத்தி எல்லையிலிருந்து கலசப்பாடி கிராமம் வரை உள்ள வனப் பகுதியில் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரூர் சட்டமன்றத் தொகுதி, சித்தேரி ஊராட்சி, கலசப்பாடி கிராமத்திற்கு வாச்சாத்தி எல்லையிலிருந்து மலைக்குச் செல்லும் சாலையின் வழித்தடம் தருமபுரி வனக் கோட்டத்திற்குட்பட்ட தொம்பக்கல், தொம்பக்கல் விரிவாக்கம் மற்றும் பள்ளிப்பட்டி ஆகிய காப்புக் காடுகளில் அமைக்கப்பட வேண்டும். மேற்படி காப்புக் காடுகளில், தமிழ்நாடு வனச் சட்டம், 1882 பிரிவு 16–ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, வழித்தட உரிமை ஏதும் அனுமதிக்கப்படவில்லை. மேற்படி கிராமங்களில் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் வனப் பகுதியில் 6.00 கிலோ மீட்டர் நீளத்திற்கும், 7.5 மீட்டர் அகலத்திற்கும் சாலை அமைக்க, நடைமுறையிலுள்ள வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி, வன நிலம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை, பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரால் உரிய இணையதளத்தில் கருத்துரு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு 5 ஹெக்டேர் வனப் பரப்பு தேவைப்படும். இந்தப் பரப்பளவு ஒரு ஹெக்டேருக்கு மேல் உள்ளதால், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி ஒன்றிய அரசிடம் ஒப்புதல் பெற வேண்டும். மேலும், ஒதுக்கப்பட வேண்டிய வன நிலத்திற்கு ஈடாக வழங்கப்பட வேண்டிய இரண்டு மடங்கு வீட்டு நிலம் மற்றும் தோட்டம் உருவாக்குவதற்குச் செலுத்தும் தொகை போன்ற விவரங்களைப் பெற்றுக்கொள்வது குறித்து பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரால் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இந்த விவரங்கள் யாவும் முழுமையாகப் பதிவேற்றம் செய்யப்படும்பட்சத்தில், வனச் சாலை அமைக்க அனுமதி தருவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா*

அவர்களையும், அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும், என்னுடைய மாவட்டத்தினுடைய நாயகர் அண்ணன் திரு. கே.பி. அன்பழகன் அவர்களையும் வணங்குகிறேன்.

தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சித்தேரிமலை, 63 மலைவாழ் மக்கள் வாழ்கிற குக்கிராமங்களை உள்ளடக்கியது. கலசப்பாடி, வாச்சாத்தியிலிருந்து 7 கிலோ மீட்டர். வனச் சாலை அமைக்க, வன உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் கடந்த ஆண்டு பெண்ணாகரம் வட்டம், நெற்குந்தியிலே 40 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டும், அதற்கு வனத் துறையின் அனுமதி வழங்கப்படாமல் இருந்தது. அதற்குப் பின்பாக, 17–11–2021 அன்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்திலே கலந்துகொண்டு, நான் இந்தக் கோரிக்கைகளை எடுத்து வைக்கிறபொழுது எனக்குச் சில விளக்கங்களை வழங்கினார்கள். அதனடிப்படையிலே நல்லம்பள்ளி ஒன்றியம், கம்மம்பட்டி கிராமத்தில் 45 ஏக்கர் நிலம் வனத் துறைக்கு பரிந்துரை செய்யப்பட்டு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அங்கே அரசநத்தம், கலசப்பாடி, அக்கரைகாடு, கோட்டக்காடு, ஆலமரத்துவளவு, கருக்கம்பட்டி போன்ற கிராமங்களில் 4 அங்கன்வாடி மையங்களும், 4 GTR schools–ம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கே மழை, வெள்ளம் ஏற்படுகின்றபோது மலையிலிருந்து காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து, பாதையின் குறுக்கிலே நீர்வடிகின்றவரை சாலையில் போக முடியவில்லை. அதனால், இதை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மக்களுடைய கோரிக்கையான இந்தத் தார்ச் சாலையை விரைவாக அமைத்துக் கொடுக்கும்படி தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரால் சாலை அமைக்க வேண்டிய பகுதி தருமபுரி வனக் கோட்டத்திலுள்ள இரண்டு காப்புக் காடுகள் வழியாகச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி தேவைப்படும் வன நிலங்களுக்குப் பதிலாக இரண்டு மடங்கு மாற்று நிலம் கம்மம்பட்டி கிராமத்தில் சர்வே எண் 692/7–ல் 10 ஹெக்டேர் பரப்பளவு தேர்வு செய்யப்பட்டு,

2022 ஏப்ரல் 7]

24–3–2022 அன்று தருமபுரி மாவட்ட வன அலுவலரால் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. அங்கு அமைக்கப்படவுள்ள சாலையானது வாச்சாத்தி, அரசநத்தம், வைகுண்டம்வலசு, கலசப்பாடி, கருக்கம்பட்டி, அக்கரைகாடு, கோட்டக்காடு மற்றும் ஆலமரத்துவளவு ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 4,000 மக்களுக்குப் பயன்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தேவைப்படும் கூடுதல் விவரங்கள் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரால் உரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட பின்னர், ஒன்றிய அரசின் முன்னனுமதியைப் பெற்று, வன நிலம் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கையை மேற்கொண்டு, அங்கு சாலை அமைக்க அனுமதி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, சிட்லிங் ஊராட்சி மற்றும் சித்தேரி ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதிகள் முழுவதும் மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியினர் வாழுகின்ற பகுதிகளாகும். இங்கே வன உரிமைச் சட்டத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு உரிமை இருக்கிறது. சூரியகடை—வெளாம்பள்ளி, எஸ்.தாதம்பட்டி—சூளகுறிச்சி, மன்னூர்—நலமாங்கடை, மாம்பாறை—குண்டல்மடுவு, நொச்சிகுட்டை, அழகூர், கருக்கம்பட்டி, தேக்கல்பட்டி, எருமைக்கடை, மிதிகாடு போன்ற குக்கிராமங்களுக்கு வன உரிமைச் சட்டத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு அந்தச் சாலைகளை, ஏறக்குறைய 12 கிராமச் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, திருவண்ணாமலை மாவட்டத்தையும், தருமபுரி மாவட்டத்தையும் இணைக்கின்ற என்னுடைய தொகுதியில் செங்கம் தொகுதிக்குட்பட்ட கருக்கல்பாடி கிராமத்திற்குச் செல்லும் இரண்டு கிலோ மீட்டர் வனச் சாலையை, தார்ச் சாலையாக மாற்றிக் கொடுக்க வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது, பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வனவாழ்வினர் (வன உரிமை அங்கீகரிப்பு) சட்டம், 'The Scheduled Tribes and other Traditional Forest Dwellers (Recognition of Forest Rights) Act, 2006'–ன்படி மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஒரு ஹெக்டேர் பரப்பளவிற்குக் கீழுள்ள சாலைகளைப் பராமரிக்கவும் மற்றும் மேற்பார்வையிடுவதற்கும் தமிழக வனத் துறையால் அனுமதிக்கப்பட்டு வருகிறது. மேலும், தாங்கள் கேட்ட பகுதிகளில் ஒரு ஹெக்டேருக்குமேல் இருந்தால் அதுகுறித்து ஆராய்ந்து, அதற்கு உடனடியாக உத்தரவு தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

67—

ஜவுளிப் பூங்கா

***5320—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைத்திட கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.